2025 – ஜீன் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 151 / 2024 C/W 152, 164, 165, 183 & 184 /2024*

*2025–ம் ஆண்டு ஜீன் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 2, புஷ்பா |
| கணவர் பெயர் | : | மோகன்ராஜ் |
| ஊர் | : | கிருஷ்ணாபுரம் |
| வட்டம் | : | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | நகை மதிப்பீட்டாளர் |
| வயது | : | 41 |

<u>தேதி: **17.06.2025.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் எம்சிஓபி நெம்பர் 152/2024 மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன், அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

**11).** திருச்சி நியூரோஜன் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு சான்று அசல் 2 – பக்கங்கள் கொண்டது, **ம.சா.ஆ.11,**

**12).**எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது. **ம.சா.ஆ.12.**

**13).** பெரம்பலூர் மாவட்ட கிருஷ்ணாபுரம் IDFC First –வங்கியில் நான் நகை மதிப்பீட்டாளராக வேலை பார்ப்பதற்கு வழங்கப்பட்ட சான்று ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.13**. **(2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

**14).** திருச்சி நியூரோஒன் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் 15– எண்ணிக்கைகள் கொண்டது அசல் ரூ.34830/–க்கானது **ம.சா.ஆ.14**, **(2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).** ஆக தாக்கல் செய்கின்றேன்.

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

விபத்து நடந்த போது 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்தேன். விபத்து நடந்த போது காலை சுமார் 11.00 மணியிருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அளவிற்கு அகலமான ரோடு என்றால் சரிதான். விபத்து ஒரு திருப்பத்தில் நடைபெற்றது என்றால் இல்லை. விபத்து நடந்த ரோடு நேரான ரோடு என்றால் சரிதான். எதிரே ஒரு இருசக்கர வாகனம் வருவதை பார்த்து விட்டு அதன் மேல் மோதாமல் இருப்பதற்காக திருப்பும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரே வந்த இருசக்கர வாகனமும் வேகமாக வந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் வேகமாக வராமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணமான இருசக்கர வாகனத்தையும், அதன் ஓட்டுநரையும் ஒரு தரப்பினராக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த உடன் எனக்கு சுயநினைவு இல்லை. நான் வீட்டிற்கு திரும்பியவுடன் தான் முதலில் என்னை அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாக தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் திருச்சி நியூரோ ஒன் மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால்

சரிதான். விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.3 பாலிசியில் 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் லயாபிலிட்டி பாலிசி என்று போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1–ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் உள்ளே அமர்ந்து செல்லும் பயணிகளுக்கு பிரிமியம் தொகை செலுத்தாததால் பயணம் செய்த நபர்கள் 3–ம் நபர்களாக கருதமுடியாது என்றால் சரியல்ல. நான் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிவதாக தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 ஆவணம் விபத்திற்கு முன்பே பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். ம.சா.ஆ.13 ஆவணத்தில் நான் தொடர்ச்சியாக 29.06.2023 வரை வேலை பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது நாள் வரை நான் நகை மதிப்பீட்டாளராக வேலை பார்ப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் இதுநாள் வரை வேலை பார்த்து வருவதற்கான அடையாள அட்டையோ, எனக்குறிய வருமானத்தை காட்டுவதற்குண்டான சம்பளப்பட்டியலோ தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் நகை மதிப்பீட்டாளராக வேலை பார்த்து வருவதாக சொல்லியுள்ளதற்கு ஆதரவாக கல்விதகுதி சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். காயத்தின் தன்மையையும், இயலாத்தன்மையையும் மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து காயங்கள் சிகிச்சை மூலமாக சரிசெய்யப்பட்டுள்ளது என்றும், இயல்பான வாழ்க்கை வாழ்ந்து சம்பாதித்து வருகின்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு அதிகமான நபர் பயணம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.14 ஆவணம் வழக்கிற்காக என்னால் மிகைப்படுத்தி தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.14 ஆவணத்தில் 8–வது பில்லில் காட்டப்பட்டுள்ள ரூ.10,000/– தொகை மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது செலுத்தப்பட்ட தொகையாகும். அந்த தொகையை

ம.சா.ஆ.14 ஆவணத்தில் கண்ட ரூ.34,830/- தொகையில் இருந்து கழித்துக்கொண்டு மீத தொகையான ரூ.24,830/- மட்டும் மருத்துவ செலவாக செலுத்தியுள்ளேன். விபத்து காயத்தினால் எனக்கு எந்தவித வருமான இழப்பும் ஏற்படவில்லையென்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் உரிய பிரிமியம் தொகை செலுத்தாததால் 2-ம் எதிர்மனுதாரர், 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பயணியாக பயணம் செய்த எனக்கு எந்த நஷ்டஈடும் வழங்க 2-ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், 2-ம் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம்/- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**